


# வேலி இல்லாத வீடு

**'உ**ள்ளத்தின் பலவீனங்களில் மிக நல்ல பலவீனம் காதல்?'

பொடியாகத் தூற ஆரம்பித்தது வானம். கங்கில் தூவிய சாம்பிராணி போல, கொதித்த பூமியில் நீர்த்துளி பதியப் பதிய குப்பென மண்வாசனை கிளர்ந்தது. ஆழ மூச்சிழுத்து அதை அனுபவித்தபடி ரவிக்கையின் ஊக்குகளைப் பொருத்திக் கொண்டிருந்தாள் சுஜாதா.

அன்று விடுமுறை என்பதால், விச்ராந்தியாக எதிரே வந்து நின்று கேட்டாள் ராஜி...

“நேற்றைய ஷாப்பிங்ல வாங்கினேன். நல்லாருக்கா?”

“ம்ம்…”

“தலையை நிமிர்த்தாம ம்ம்னா எப்படி?”

தலையை சற்று நிமிர்த்திய சுஜாதா, மறுபடி வேலையில் கண்ணானாள்.

“இது சுத்தம்! நிமிர்ந்தவ நான் காட்டினதைப் பார்த்தியா?”

வேலை முடித்து, ஊசியை நூல்கண்டில் செருகிவிட்டு, அரக்கு வர்ண ரவிக்கையை அழுந்த நீவி மடித்த சுஜாதா புன்னகைத்தபடி சொன்னாள்…

“என்ன சொல்லு… பெண்கள் கெட்டிதான்.”

“பார்க்காமலேயே ஏன் பாராட்டறே?”

“உன் கவனிப்பை மெச்சினேன் தோழி! நிமிர்ந்து பார்த்தாலும் என் கவனம் நீ காட்டிய பொருளில் பதியலைனு புரிஞ்சுக்கிட்டியே. அதற்காக…”

“ஏதோ ரோபோட் போல நிமிர்ந்தே… உன் கவனம் என் ஸ்டிக்கர் பொட்டில் ஒட்டலைன்றது எந்த முட்டாளுக்குப் புரியாது?”

“ஆம்பிளைக்குப் புரியாதே!”

இரு பெண்களுக்கும் சிரிப்பு பொத்துக் கொண்டது.

“உன் இந்திரனை மனசில் கொண்டுதானே ஆண் இனத்தையே குட்டறே?” - அறை தோழி கேட்க, உதடு மூடி சிரிப்பை மென்றாள் சுஜாதா.

“பின்னே? முழுங்கறாப்போல் பார்க்கறது… ஆனா, ஒரு வார்த்தை பேசறதில்லை… நாம அந்த முழியைக் கவனிச்சிட்டதும் புரியாது…”

“விட்டியாம்மா நீ? ஆளை மடக்கிட்டியே…”

வெட்கம் கொள்ள சிரித்த சுஜாதாவின் ஈர உதடுகள் பூ போலவே விரிந்தன. அவற்றின் சிவப்புக்கு ஈடு கொடுப்பதுபோல கறுத்த விசால விழிகளும் அடர் புருவங்களும் அவளைப் பேரழகி ஆக்கின.

“பின்னே? என்னைப் பார்க்க ஒரு தவிப்பு… பார்க்காமல் வேறுவிதத் தவிப்பு… அத்தனையும் கவனிச்சேன்.”

“ஆஹா… கவனிச்சாங்களாம் பெரியம்மா! ரசிச்சேடீ.”

இப்போது சுஜாதா முகத்தில் வெட்கம்.

“நல்ல மனுஷர்… அப்பாவி…”

“இப்பாவை அப்பாவியை...”

“போதும்டீ உன் ரம்பம்” - மாற்றுடையுடன் குளிக்கப் போனாள் சுஜாதா. மிதமான வெந்நீர் அவளை வருடிக் கழுவ, உள்ளே சுக வெப்பமாக இந்திரனின் நினைப்பு. நறுமணப் புகையாக அது உள்ளேறிக் கிறக்கியது... அவனைப் பற்றியே நினைத்து நினைத்து மயக்கியது.

சுஜாதாவுக்கு டிராவல்ஸ் கம்பெனியில் வேலை. நான்காம் மாடியில் ஒரு சின்ன அறைதான் அலுவலகம். அதே கட்டடத்தின் கீழ்ப் பகுதி முழுவதுமாக பரவியிருந்த ஒரு பிரபல நிறுவனத்தின் வீட்டு உபயோகப் பொருட்களின் விற்பனைப் பிரிவில் அவனுக்கு வேலை.



மேல்தளத்தில் அனைவருக்கும் பொதுவான உணவகம். அங்கே போக, வருகையில் ஒருவரது பார்வை மற்றவரை உரசியது. இந்திரனின் விழிகள் ஒரு தவிப்புடன் இவளைத் தொடரும். ஒருநாள் சுஜாதா சிநேகமாக புன்னகைக்க, அவன் அவசரமாக விழிகளை விலக்கிக் கொண்டான்.

அவனது அலுவலகப் பெண் ஊழியர்களிடம் பேச்சு தந்தாள்.

‘ஓ... இந்திரன் ஸாரா? கண்ணியமானவர். வேலை லிமிட்டைத் தாண்டி ஒரு சொல் வராது. ஆனா, அதே சமயம் அம்மாஞ்சியும் இல்ல!’

‘ஓஹோ...’

‘டி.வி., ஃபிரிட்ஜ், குக்கிங் ரேஞ்ச் வாங்க வர்ற லேடீஸ் இவரைத்தான் கேட்பாங்க. அவங்க ரசனை புரிஞ்சு தேர்ந்தெடுத்து தருவார். சீக்கிரமே பிரான்ஞ்சின் மானேஜர் ஆகக்கூடும்.’

பிற பெண்களிடம் சகஜமாக பேசுபவர் தன்னிடமிருந்து ஏன் ஒதுங்குகிறார்? பேச வேண்டுமென்ற நிர்பந்தம் இல்லைதான். அப்படியானால், ஏராளமான ஆவலும் துளி ஏக்கமுமாக தன்னை விழுங்கும் அந்தப் பார்வைக்குப் பொருள் என்ன?

அன்று உணவகத்தின் ஒரு மேஜையில் தனியே தேநீர் அருந்திக் கொண்டிருந்தவனைக் கண்டதும் இவளுக்குள் ஒரு குட்டி குஷி! “ஹலோ...” ஒரு கோப்பையுடன் அவன் எதிரே அமர்ந்தாள்.

“ஓ! ஹலோ...” - தடுமாறினான், முகம் சிவக்க.

உதடுகளின் துடிப்பு, மீசையின் அடர்த்தியை மீறி தெரிந்தது. பேச்சை இவள்தான் நெட்டி நகர்த்த வேண்டியிருந்தது.

“ஒரு எலக்ட்ரிக் குக்கர் வாங்கறதாக இருக்கோம்” எனவும், சற்று தளர்ந்தான்.

“நிறைய மாடல்கள் இருக்குது. ஆயிரத்து நானூறில் இருந்து...”

“எங்க பட்ஜெட் ஆயிரத்து இருநூறுதான். நாலு பெண்களாக ஒரு சின்ன ஃபிளாட்டில் குடியிருக்கோம். ஆளுக்கு முந்நூறு போடலாம். தவிர, கரென்ட் பில்லும் கூடுமே...?”

“ஷோ ரூமுக்கு வாங்க. முடிவு செய்யலாம்...”

திரைப்படங்களில் கண் பட்டதும் அல்லது கை தொட்டதும் வெடித்துக் கிளம்புகிற காதலைக் கிண்டலடிப்பவள்தான் சுஜாதா. ஆனால், இந்திரனின் பார்வையில் சலனப்பட்டாள். வெகு ஆழமான, ஆர்வமான பார்வை... நீ எனக்கு மிக முக்கியமானவள் என்று சொல்லும் வகையில்.

இவள் தன் படிப்பு, வேலை பற்றி சொன்னதைப் புன்னகையுடன் கேட்டுக் கொண்டான். வெளியேறுகையில் வாசலின் மேற்புறக் கண்ணாடியில் இருவரும் இணையாக தெரிய, ஏனோ இவளது நெஞ்சம் விம்மியது. பஸ்ஸில் அவனது முகத்தை, தங்களது பேச்சை அசை போட்டபடி வீடு திரும்பியவளுக்கு ஒன்று உறைத்தது.

அவன் தன்னைப் பற்றி எதுவுமே சொல்லவில்லை!

சுஜாதாவுக்கு உறவென்று யாருமில்லை. அமைந்த சிநேகிதிகள் அது குறித்த ஏக்கத்தை அவளுக்குள் எழவும் விடவில்லை. பெற்றோரை இளமையிலேயே இழந்ததால் அநாதை விடுதியில் படித்தாலும், எட்டிய உறவுமுறைகள் இவளை அவ்வப்போது பட்சணத்துடன் எட்டிப் பார்த்ததுண்டு. படித்து, தன்னை ஒரு வேலையிலும் அமர்த்திய பின், இவள் சமயம் கிடைக்கும்போது பழமும் புன்னகையுமாக அவர்களையும் போய் பார்ப்பதுதான்.

கூட இருக்கும் மூன்று சிநேகிதப் பெண்களுடன் பேச்சு, ஷாப்பிங், சமையல், வீட்டை ஒதுங்க வைப்பது எனக் கழியும் விடுமுறைகள்.

ஆளாளுக்கு இவளைத் தங்களுடன் அழைத்துப் போவதும் உண்டு. கிறிஸ்துமஸை ஜான்சியோடும் தீபாவளியை ரமணி, ராஜியோடும் தடபுடலாகக் கொண்டாடி இருக்கிறாள். அலுவலகத்தில் பணிபுரியும் அல்லது உடன் படித்த பிற பெண்கள் என்று அவர்களது நட்பு வட்டம் விரிந்திருந்தது.

காவல்துறையில் பணிபுரியும் லலிதாவை ‘லத்தி லலி’ என்று கிண்டலாக கூப்பிடுவார்கள். கல்லூரியின் மனவியல் விரிவுரையாளரான ஜான்ஸியின் தோழியான லலி சொல்லும் ‘கதையல்ல நிஜங்களை’ மற்றவர்கள் விழிவிரிய கேட்பதுண்டு.

**அ**ந்த ஞாயிறு காலையில் குளித்த பின், துவைத்ததை உலர்த்தியவள் அலசிய கூந்தலைக் கோதியபோதுதான் அந்த செய்தி காதில் அறைந்தது.

“சுஜா, என் ‘செல்’லில் இப்பதான் இந்திரன் பேசினார்...” - ரமணியின் முக வெளிறல் இவளது அடிவயிற்றை இறுக்கியது.

“என்னவாம்? ஒரு அவசரத்துக்கு ஆகும்னு நான்தான் உன் நம்பரைக் கொடுத்திருந்தேன். எங்கிட்ட ‘செல்’ இல்லையே...”

பரிச்சயமாகிப் பழகிய சில மாதங்களில் அவன் இப்படி அழைத்ததே இல்லை. வேலை நிமித்தம் தன் கம்பெனி தனக்குத் தந்திருந்த 'செல்'லின் எண்ணை தந்திருந்தாலும் அவன் தன் வீட்டுத் தொலைபேசியின் எண்ணைத் தரவில்லை.

'ஏதோ அவசரம்னால்தானே... கூப்பிடுவேன் இந்திரன்?'

'தினம்தான் ஆபீஸ்ல பார்த்துக்கறோமே?'

'நீங்க நாலு நாள் லீவ்னா... 'செல்' பல சமயம் மக்கராயிடுதே' என்று இவள் அழுத்திய பிறகு விளக்கினான்.

'அம்மா, அண்ணன், அண்ணின்னு எங்களோடது கூட்டுக் குடும்பம், சுஜா. உறவுக்குள்ளேயே சம்பந்தங்கற தால வீட்டில் எப்பவும் ஆளிருக்கும். கொஞ்சம் பழங்கால மனுஷங்க. நீ என்னைக் கூப்பிட்டு பேசறதை இயல்பாக எடுத்துக்கத் தெரியாது. அதான்...'

இப்படி அஞ்சுபவனுக்கு இப்போதென்ன அவசரம்?

ரமணி சொன்னாள், "அவங்க அண்ணி இறந்துட் டாங்களாம். ஹாஸ்பிடல் பூத்திலேருந்து பேசினார். பாவம்... குரல் தழுதழுன்னுது. 'எந்த ஹாஸ்பிடல்? உடனே வர்றோம்'னேன். 'அதெல்லாம் வேண்டாம். சுஜாகிட்ட சொல்லணும்னு தோணுச்சு. அவ்வளவுதான்'னார்.."

அந்த அதிர்ச்சியிலும் இது 'சுருக்'கென்றது.

"அப்புறம் ஏன் சொல்லணும்? இது மாதிரி நேரத்தில் ஆதரவாகப் பக்கத்தில் நிற்கத்தானே நாம?"

அதற்குள் ராஜியும் ஜான்ஸியும் மொட்டை மாடிக்கு வந்திருந்தனர்.

"கட்டுப்பெட்டியான குடும்பத்தார் நடுவே நீ அப்படி 'சட்டு'னு அவர் பக்கத்திலே போய் நிற்க முடியாதே சுஜா?"

"பக்கத்தில்னா... ம்ப்ச்... அத்தனை கூட்டத்திலும் ஒரு மூலையில் என்னைப் பார்த்தாலும் அவருக்கு ஒரு தைரியம்தானே?"

"அவர் விலாசம்?"

"தெரியும். ஒருநாள் சாவகாசமாக 'பாடி' ஏரியா போய் பார்க்கணும்னு ஆசை. ஆனா, இப்படி நேரும்னு... ச்சே..."

போட்டிருந்த அரக்கு ரவிக்கைக்குத் தோதாக அரக்குப் புள்ளிகளும் கோடுகளுமான ஒரு பழுப்பு ஜார்ஜெட்டைச் சுற்றியவள், கிளம்பினாள்.

"நீங்கெல்லாம் வேணாம்ப்பா... கும்பலாகப் போனால் யார், எதுக்குன்னு கேள்வி வரும்."

பிரதான சாலையிலேயே ஆட்டோவை நிறுத்தி இறங்கிக் கொண்டாள். பெய்த மழையில் மண்ணின் வழக்கமான அசட்டு நிறம் மாறியிருந்தது. சிறு குழிகளில் நீர் தேங்கி, சூரிய ஒளியில் மின்னியது. ஏதோ பூமி ஆங்காங்கே நகை பூட்டிக்கொண்டது போல...

வேறொரு சமயமானால் இதை ரசித்திருக்கலாம். இப்போதிருந்த மன சஞ்சலத்தில் கவனமாக அந்தச் சிறு குட்டைகளை தாண்டி நடக்க மட்டுமே முடிந்தது.

துக்க வீடு தனித்து தெரிந்தது, சில வாகனங்களும் பல தலைகளும் பரபரப்புமாக இருந்ததால்.

முதன் முதலாக இப்படி ஒரு சூழலில் இந்த வீட்டுக்கு வருவது வேதனைதான். கலங்கி அழும் காதலனைப் பார்க்கத் தாங்காது! தன் கண்களால் அவனை ஆறுதல்படுத்த வேண்டும்.

வேம்பின் நிழல் படர்ந்த தனி வீடு அது. இடப்புறம் சாய்ந்த ஓலைக் கூரையின் கீழே ஒரு பச்சை மாருதி. வீட்டில் கார் இருப்பதாகச் சொன்னதில்லையே! தன்னைப் பற்றி பேசினால் அல்லவா? இப்போது இறந்த அண்ணியின் பெயர்கூட சுஜாதாவுக்குத் தெரியாது. அவளுக்குத் திருமணமாகி எத்தனை வருடங்கள்? எத்தனைக் குழந்தைகள்? உடம்பில் அண்ணிக்கு என்ன பிரச்னை?

ஏதும் தெரியாது. மர நிழலில் கிடந்த பெஞ்ச் சில் அமர்ந்திருந்த மற்ற பெண்களோடு இவளும் சேர்ந்து கொண்டாள்.

“என்னங்க ஆச்சு?”

துக்க வீட்டில் இப்படித்தான் ஆரம்பிக்க வேண்டுமென்று தெரியும்.

“பாவிப் பொண்ணு… இனி பாலாம்மால்ல ஊரு வாயில அரைபடணும்?” ஒருத்தி புலம்பலை ஆரம்பிக்க, சற்று கலைந்த கூந்தலும், கலையாத பொட்டுமாக இருந்த மற் றொரு பெண் கூறாய் கேட்டாள், “நீ யாரும்மா?”

“இந்திரன் ஸார் ஆபீஸ்ல நான் கேஷியர்.சாவுன்னு ஒரு வாரம் லீவ் கேட்டார். முதலாளியும் ஊர்ல இல்லை. ஞாயித்துக்கிழமைங்கிறதால கடையில கூட்டம் அதிகம். நான் எல்லார் சார்பாகவும் வந்தேன்.”

“ம்ம்…”

“அதிலும் ஸாருக்கு ஆபீஸில் நல்ல பெயர். பாவம் போன்ல அழுதுட்டாரு.”

“பின்னே? அண்ணன் சம்சாரம்னாலும் மீனா, இந்திரனுக்கு சொந்த அக்கா மகளில்லையா?” - இவள் முகத்தைக் கண்டு மற்றொருத்தி விளக்கினாள்.

“மீனா, தன் தாய்மாமனையே கட்டிக்கிச்சு. எல்லாரும் ஒண்ணா நல்லாதான் இருந்தாங்க…”

“பாலம்மாங்கறது?”

“சந்திரன், இந்திரனுடைய அம்மா. மீனாவுக்குப் பாட்டி.”

“மீனாவுக்கு உடம்புக்கு என்ன?”

குரலைத் தாழ்த்தினார்கள்.

“மீனா தற்கொலை பண்ணிக்கிச்சு!”

தற்கொலையா? இந்திரனின் குடும்பத்தில் வாழ வந்த பெண்ணுக்கு ஏன் அத்தனை வெறுப்பு... விரக்தி?

இவளது நாக்கு அதிர்ச்சியில் கட்டுண்டு போனது. சற்று பொறுத்து கேட்டாள், “சொந்தத்துக்குள்ளேதானே கட்டினாங்க... பிறகென்ன?” என்று.

இப்படி பிறர் வாயைக் கிண்டக்கூடாதுதான். ஆனால், அந்தக் குடும்பம் பற்றி இப்படித்தான் அறியவேண்டும். இந்திரனோடு பழகிய சில மாதங்களில் அவன் பேச்சை பொதுப்படையாக நடத்தவே விரும்பினான். தன் வீட்டை பற்றி எதுவும் சொன்னதில்லை.

“நேத்து ராத்திரி, தனக்கே தீ வச்சுக்கிட்டா...”

“அவளை ஆஸ்பத்திரிக்கு ஏந்திட்டு ஓடினப்பவே நினைச்சேன்... மீள மாட்டானு.”

“ம்ம்... மீளவும் உடம்புல தெம்பு வேணுமில்ல?”

“நரம்பும் தோலுமாத்தானே நடமாடினா...”

“அதென்னக்கா வியாதி? அப்படி அவளை அரிச்சுக் கலைச்சிடுச்சு? பேய் ஏதும் பிடிச்சிருச்சோ?”

“அதெல்லாம் கிராமத்துல பேசற கதை.”

சுஜாதாவின் கேள்வியை மறந்து, பெண்கள் தங்களுக்கிடையே பேசலானார்கள்.

“கல்யாணத்தப்ப கிழங்காட்டம் உடம்பு, பூவாட்டம் முகம்னு வந்த பொண்ணு தானே?”

“எப்படிப்பட்ட பல் வரிசை, நம்ப சினிமா ரோஜாவைப் போல.”

“கரிஞ்சு தீஞ்ச முகத்துல அந்தப் பல்லு எடுப்பா நின்ன கோரம்... யப்பா...” - சொன்னவளின் உடம்பு சிலிர்த்தது.

“கட்டின புதுசுல சந்திரனோட சிங்காரிச்சுட்டு விருந்து, விசேஷம்னு போனவ... குழந்தை தரிக்கவுமே அசந்துட்டா.”

“ம்ப்ச்... பிறந்த ரெண்டுமே இப்படீன்னா...”

“எப்படீங்க?” - ஆவலை அடக்க முடியாமல் இடையில் புகுந்தாள் சுஜாதா.

“மீனா மகளுங்களுக்கு மூளை வளர்ச்சி கம்மிம்மா. மத்த சிறுசுங்க அதுங்களை ‘லூஸு, லூஸு’ன்னுங்க, பாவம்!”

மற்றொருத்தி நெற்றி சுருங்க யோசித்தாள் - “பிள்ளை வயித்துல இருக்கும்போதே மீனா சதா தூங்கிக் கிடக்கலை?”

“ஆமாக்கா. மருமவ அஞ்சாறு கிலோ மெலிஞ்சுட்டதா பாலம்மக்கா சொல்லி வருத்தப்பட்டுச்சுல்ல. கல்யாணமானதுக எல்லாம் உடம்பு கூடி மினுமினுங்க, எங்க மீனா இப்படி தேஞ்சு போவுதேன்னு புலம்ப... நானும் எனக்குத் தெரிஞ்ச கைப்பக்குவமெல்லாம் சொன்னேன். ராத்திரி பாலுல தேன் கலந்து கொடுக்கச் சொன்னேன். கூடவே தயிர், நெய், கவுச்சி சூப்பு... எதுல குறை வச்சாங்க?”

“காலைல பத்து மணி வரைக்கும் மீனா எழுந்துக்காதபோதும் அக்கா சலிச்சதில்லையே...”

“மாமியாருன்னாலும் சொந்தப் பாட்டியில்லே? தவிர, உடம்பு தேயற பேத்தியை அதட்டி எழுப்பவும் மனசு வரலை...”

ஒருவித மலைப்புடன் இந்த சம்பாஷணையை சுஜாதா கவனித்தபடி இருக்க, இழவு வீட்டின் இறுக்கத்தை ஒரு ஓலம் கிழித்து எறிந்தது.

“பாடி வந்திருச்சு போல...” - இருந்தவர்கள் பரபரக்க, வேனிலிருந்து வெள்ளைத் துணி சுற்றிய சடலம் இறக்கப் பட்டது. அதுவரை மழையால் குளித்து ரம்மியமாகத் தெரிந்த உலகம், கொடூரமாகப் பட்டது.

“போலீஸ் கேஸு ஆயிரும்னு வேற பேச்சு... சந்திரன் தெரிஞ்சவக மூலம், பொண்டாட்டி உடம்பைக் கூறு போடாம காப்பாத்திட்டான். இனி சீக்கிரமா தூக்கிடணும்...”

கசங்கிய பூக்கள் போல உயிரற்ற தாயைத் தொடர்ந்தன, இரு குழந்தைகளும். சுஜாதாவுக்குள் துக்கம் முட்டியது.

பின்னால் யாரோ கிசுகிசுத்தார்கள், “இதுகளைக் காட்டித்தான் டாக்டர்ஸை மசிய வச்சானாம். ‘இப்படி அரைகுறையாய் பிறந்ததுகளைக் காண சகியாமத்தான் எம் மீனு சீக்காளி ஆனா... இப்ப எரிஞ்சே கரியாயிட்டா’னு இவன் அழுதப்ப அவங்களுக்கும் தாங்கலையாம்.”

வேனிலிருந்து கடைசியாக இறங்கியவன்தான் மீனாவின் புருஷனோ? அந்த அரைகுறைப் பூக்களின் தகப்பன்?

இறங்கி நின்றவன் சுற்றிலும் பார்வையை ஓட்டினான். அத்தனை பேரையும் கத்தியாகக் கீறிப் போன அவனது பார்வையைச் சந்தித்தவளுக்கு, உடம்பு ஏனோ சிலிர்த்தது.

**ஒ**ருநாள் வேலையை முடித்த ஆயாசத்துடன் கடலுக்குள் குளிக்க இறங்கிக் கொண்டிருந்தான், சூரியன். கடலின் அலைகள் மட்டும் ‘எங்களுக்கு சோர்வே இல்லையாக்கும்’ என்ற தெம்புடன் குதித்து விசிறின. ஒவ்வொரு முறையும் கரை மணலில் சிறிதை சுரண்டி எடுத்து வம்பிழுத்தன.

ஒரு பெருமூச்சுடன் நிமிர்ந்தான் இந்திரன்.

“இதை எல்லாம் எப்படி நான் உங்கிட்ட சொல்றது சுஜா? எனக்கு நானே யோசிக்கறதுக்கே பயந்தேன். நீயா எங்க வீட்டுக்கு வந்து விவரங்களைத் தெரிஞ்சு கிட்டதும்கூட நல்லதுதான்!”

மறுபடி ஒரு நெடுமூச்சுடன் அவன் தலை கவிழ்ந்தது.

அவனது மன ரணம் அறியாமல், அவன் மௌனத்தை, தயக்கத்தை கேலி பேசியது இவளை உறுத்தவும், அவன் கையை ஆதரவாகப் பற்றினாள்.

“நீங்க ரொம்ப இன்ட்ரோவெர்ட்ப்பா. கொஞ்ச மேனும் மனசு விட்டுப் பேசணும்...”

கசப்பாகப் புன்னகைத்தான்.

“நான் வேலை பார்க்கறப்ப என்னைக் கவனிச்சல்லே?”

“ம்ம்... சகஜமாத்தான் பேசறீங்க... வாடிக்கையாளர் எல்லாம் உங்களைத்தானே தேடுவாங்களாம்?”

“ஆக, இந்த இறுக்கம் என் சுபாவமில்லை சுஜா. வீட்டுச் சூழல் என்னை மடக்கிடுச்சு. அண்ணன் வீட்ல யாரோடும் பேசறதில்லை. சில விநோத சிநேகிதரோட சுத்திட்டு, தோணின நேரத்துக்கு வீடு திரும்பினவனை அம்மா கண்டிச்சதுமில்லை. ஏன்னா, தானா படிச்சு முன்னேறி, கம்ப்யூட்டர் ஹார்ட்வேர்ல மாசம் இருபதாயிரத்துக்குக் குறையாம சம்பாதிக்கிறவன். வீட்டுல அவனுக்கு தனி அறை. புது பேட்லாக் பொருத்தி, சாவி அவன்கிட்ட மட்டும் தான். சாப்பிட்டதும் அதுக்குள்ளே புகுந்துக்கறது...”

“அதனால அம்மா கல்யாண பேச்சை எடுத்திருப்பாங்க?”

“இல்லை. எங்கக்கா சுகிர்தம்தான் தன் பொண்ணு மீனுவைத் தம்பிக்குத் தர ஆசைப்பட்டாங்க. இப்படி விட்டேற்றியானவனை உறவுக்குள் கட்டி நெருக்கிக் கலாம்னு சொல்ல, அம்மாவுக்கும் சம்மதம். ஆனால், அண்ணன் உடனே கல்யாணத்துக்கு சம்மதிச்சதுல எங்களுக்கு ஆச்சர்யம்தான்!”

முழங்கால்களைக் கைகளால் வளைத்து அமர்ந்திருந்த சுஜாதா குறுக்கிடாமல் கவனித்தாள்.

“படிச்ச பொண்ணெல்லாம் வேணாம். இதுதான் சரின்னவன், மீனாவோடு திருப்தியாத்தான் வாழ்ந் தான். அவ எங்க வீட்டுக்கே மருமக ளானதில் எங்களுக்கும் சந்தோஷம்.”

“ஒரு வருஷத்தில் குழந்தை பிறந்திருக்கும்... இல்லையா? மூத்தவளுக்கு நாலு வயசிருக்குமே?”

“ம்ம்... சின்னதுக்கு ரெண்டரை... அவங்களைப் பார்க்கையில் தலைக் குள் முள்செடி வளர்ந்து நெருக்கற அவஸ்தைதான் எங்க எல்லாருக்கும்!”

“டாக்டர்ஸ் என்ன சொல்றாங்க? நெருங்கிய உறவில் விளைந்த வாரிசு என்பதினாலா?”

“அதுவும்தான். ஆனா, மீனா மாறிட்டா. சாப்பிடக்கூட முடியாத அளவுக்கு ஒரு தூக்கம். சதா படுத்து, சாய்ஞ்சு சரிஞ்சு தூங்குவா. எங்கம்மா விட்டுட்டாலும், மகளைப் பார்க்க வரும் சுகிர்தக்கா திட்டுவா. ‘இதென்னடி மூதேவித் தூக்கம்’னு. ஆனா, சந்திரன் பரிஞ்சு வருவான். ‘அவ முடியாமத்தானே படுத்துக்கறா? விடுங்க... தூங்கி எழுந்தா சரியாயிடும்’னு.”

“ஆக, தம்பதிகளுக்கு இடையே கசப்பில்லை?”

“இருந்ததெல்லாம் விளங்காத மர்மம்தான், சுஜா. மீனாவை முதல்ல தனக்குத் தெரிஞ்ச டாக்டரிடம் கூட்டிப் போக, அம்மாவும் வலிய அவளை ஒரு லேடி டாக்டர் கிட்ட காட்டினாங்க. நரம்பு தளர்ச்சி, ‘ஹீமோக்ளோபின்’ ஆறுதான். ஆக, சோகைனு டாக்டர்ஸ் கலர் கலராக மாத் திரைகள், டானிக் தந்தாங்க. கூடவே சாப்பாடும் உள்ளே இறங்கணுமே. மீனுவின் உடம்பு தேறலை. குழந்தை களைக்கூட கவனிக்க முடியாத அசதி... தூக்கம்!”

இவள் திகைப்புடன் கேட்டபடி இருந்தாள்.

“இது தவிர...” - தொடர தயங்கினான்.

“பரவாயில்லை... சொல்லுங்க.”

இவன் சொல்வதை வைத்துத்தானே இறுகிய முடிச்சுக்கள் அவிழக் கூடும்? தான் அதில் சிறிதேனும் உதவக் கூடுமா என்பது புரியும்.

“அண்ணனும் மீனுவும் ராத்திரி எட்டுக்கெல்லாம் டிபனை முடிச்சிட்டு அவங்க அறைக் கதவைத் தாழிட்டிருவாங்க. குழந்தைகளைப் பார்த்துக்கறது அம்மாதான். ஒரு சமயம் ரெண்டுக்குமே சேர்ந்து தட்டம்மை தாக்க, அம்மா திணறிட்டாங்க. அக்கா உதவிக்கு வந்ததால சமாளிச்சாங்க. சந்திரன் அலட்டிக்கலை. மீனுவால முடியலை.”

“ஓ... ஹாலில் உட்கார்ந்து டி.வி. கூடவா பார்ப்பதில்லை?”

“அவன் ரூமிலேயே எல்லாம் உண்டு.”

“உங்கண்ணா... குடிப்பாரா, இந்தர்?”

“இல்லை... அவன் தளர்ந்து தள்ளாடி பார்த்ததில்லை. சதா ஒரு வித இறுக்கம்தான்!”

சூரியன் முழுக்க கடலில் அமிழ்ந்திருக்க, இருட்டி இருந்தது. தொலைவில் ஒளிர்ந்த கப்பலின் விளக்குகளைப் பார்த்தபடி தொடர்ந்தான்...

“உன்னிடம் எனக்குப் பிடிச்சதே அதான் சுஜா.”

“அழகாய் மொட்டையாப் பேசறீங்க!” - சூழலை சற்று லகுவாக்க சிரித்தாள்.

“நீ எப்போதும் எல்லாரிடமும் இயல்பாக, இனிமையாகப் பழகறதைச் சொன்னேன். என் பைக்கை சென்னைக்கு அவருடைய பென்ஷன் பேப்பர்ஸ் விஷய மாக வந்த அத்தானின் சித்தப்பா மூணு நாளாக எடுத் துக்கவும், ஆபீஸுக்கு பஸ்ஸில் வர நேர்ந்தது. அப்போதான் உன்னை கவனிச்சேன்.”

“அதற்கு முன் பார்த்ததில்லை?”

“உண்டு... ஆனா, கவனிச்சதில்லை.”

“புரியுது...” புன்னகைத்தாள்.

“கம்ப்யூட்டர் சென்டர் போகும் மாணவிகளிடம் பேசிட்டே வருவே. கீரைக்காரி குழந்தையை வாங்கி வச்சுக்குவே. டிக்கெட்டுக்கு தினம் சரியான சில்லறை தருவே. பலரைப் போல விட்டேத்தியா வெளியே வெறிச்சபடி வரலை நீ…”

காலை சற்று மாற்றிப் போட்டவள் மணலை அலைந்தபடியே கேட்டிருந்தாள். மணலைவிட அவனது வார்த்தைகள் குறுகுறுவென்றிருந்தன.

“பஸ்ஸிலிருந்து இறங்கியதும் அங்கிருந்த பிச்சைக்காரியிடமும் போய் ஏதோ பேசினே. மறுநாள் அவளிடம் அது பற்றி கேட்டேன்.”

“விசாரணையா?”

“சின்ன க்யூரியாஸிட்டி. அவ மகளை நீ படிக்க வைப்பதாக அவ சொல்லவும் அசந்துட்டேன். அவளுக்குமே ஆபீஸ் சுத்தப்படுத்தற வேலை வாங்கித் தருவதாகச் சொன்னியாம்.”

“ம்ம். ஆனா, அந்த சுந்தரிக்குக் கர்ப்பப் பையில் ட்யூமர். குனிஞ்சு நிமிர முடியாமல் நாலு கிலோ கட்டி. உம் மகளையும் இதே தொழிலில் பாழாக்கிடாதேனு ஸ்கூல்ல சேர்த்துவிட்டேன். ஜி.ஹெச்சில் ஆபரேஷன் ஆகி, இப்ப சுந்தரியும் தேவலை. இப்ப அங்கேயே மற்ற நோயாளிகளுக்கு சாப்பாடு வாங்கித் தர, உதவனு இருந்துட்டா.”

கனிவும் காதலும் மிக அவளைப் பார்த்தான்.

“சக மனுஷர் மேல் கரிசனை உள்ளவங்க அதிகமில்லை சுஜா. ஒரே கட்டடத்தில் வேலை செய்யும் அழகான பெண் ணுங்கற அளவில் என்னில் பதிவாகியிருந்த நீ… அபூர்வ மான குணவதி, ஈரமுள்ள மனுஷினு அழுந்தப் பதிஞ்சுட்டே.”

“தாங்க்ஸ்… நாம பழகின சில மாசங்களில் இப்பதான் ‘நீ அழகு’னு எதேச்சையானாலும் சொல்லியிருக்கீங்க!” “உன்னை ரொம்பப் பிடிச்சுப் போச்சு. ஆனா, பேசிப் பழகும் துணிவில்லை. எனக்கு அந்த அருகதை இல்லைனு ஒதுங்கியிருந்தேன்…”

“உங்களை பிரம்மச்சாரியாகவே உங்கம்மா விட்டு வைப்பாங்களா என்ன?”

“ம்ப்ச்… வீட்டு நிலைமை கல்யாணம் பேசறாப்பல இல்லை.”

ஆனால், மறுவாரம் அவனது முகம் மிகவும் இருண்டி ருந்தது. “சுஜா, தனியா உட்கார்ந்து பேசணுமே?”

சுமாரான உணவகத்தில், ஒரே மேஜையாகத் தேர்ந் தெடுத்து, உணவை ஆர்டர் செய்தாள்.

“சொல்லுங்க இந்தர்…”

“போனதரம் சொன்னேன்ல… எங்க வீட்டில் கல்யாணம் பேசும் நிலைமை இல்லைனு..”

“ஆமா…”

“இப்ப நிச்சயம் பண்ணிடுவாங்க போல…”

பதட்டம் சிலந்தியாகக் கால் பரப்பி, இவளுக்குள் நடக்க ஆரம்பித் தது. இனி, இந்திரன் தனக்கில்லையா? இல்லை, வீட்டை எதிர்த்து தன்னை மணக்கக் கூடுமா? தண்ணீர் எடுத்து தவிப்புடன் குடித்தாள்.

"ரெண்டாம் கல்யாணத்துக்கு என்ன இத்தனை அவசரம்?" - சலித்தான்.

ஆக, திருமணம் இந்திரனுக்கு இல்லை... மூத்தவர் சந்திரனுக்கு!

சற்று ஆசுவாசப்பட்டாலும் ஆத்திரமும் மிகுந்தது.

"இன்னும் உங்க அண்ணி இறந்து முழுசாக ஒரு மாசம் ஆகலை..."

"பிராக்டிகலாக யோசிக்கறாங்க பெரியவங்க. எனக்கும் ஏதும் புரியலை."

அன்று கத்திபோல தன்னையும் ஊடுருவிய சந்திரனின் அந்த பார்வை ஏனோ நினைவுக்கு வர, சுஜாதாவுக்கு உதறியது.

மூத்தவனைப் பற்றிய அச்சத்துடன், இளையவனான இந்திரனின் முகத்தை ஆராய்ந்தாள் சுஜாதா. குழம்பி இருப்பினும் கள்ளமில்லாத கண்கள். உதடுகளும் தாடையும் 'இவன் மிருதுவானவன்' என்றன.

"ரெண்டு குழந்தைகள் இருக்குதே... அதனால் அம்மா வேணுங்கற அவசரமோ?" - சர்வர் கொண்டுவந்து வைத்த இட்லி தட்டுகளில் ஒன்றை இந்திரன் பக்கம் நகர்த்திய படியே கேட்டாள்.

"மூத்தவ சித்ராவுக்கு காதும் மந்தம். அவளைப் பாத்துக்கறது சிரமன்னாலும்... ச்சே..." வார்த்தைகளைத் தேடி தவித்தான் இந்திரன்.

"ம்... சாப்பிடுங்க."

கொதிக்கும் சாம்பாரில் மிதந்த சின்னஞ்சிறு நெய் இட்லிகளை ஸ்பூனால் வெட்டிப் பிரித்து வாயிலிட்டனர்.

"கல்யாணம் நிச்சயமானதுமே சந்திரன், வீட்டின் மூலையிலிருந்த தன் அறையை விரிவாக்கினான். ஒட்டினாப்பல குளியலறை, ஷெல்ஃப்னு வசதிப்படுத்தியதில் எங்களுக்குத் திருப்தி. இப்படி மெனக்கெடறவன் எங்களைவிட்டு பிரிஞ்சுப் போகமாட்டான்ற நிம்மதி."

"ம்ம்... உங்கப்பா இறந்ததால் மூத்த மகனான தனக்குப் பொறுப்பு அதிகம்னு உணர்ந்து இறுகிட்டாரோ?"

"அப்பா இறக்கும்போது எனக்கு பன்னிரண்டு வயசு. என்னைவிட சந்திரன் ஏழு வருஷம் மூத்தவன். அப்பவே அவன் போக்கு சரியில்லைன்னு, 'கண்டிச்சு கருத்தா வளர்க்கலைன்னா, நாசமாகி நம்மப் பெயரையும் நாறடிச்சிடுவான்'னு அப்பா கத்துவார். அவர் இருந்து கண்டிச்சு வளர்த்திருந்தால்... ஒருவேளை... ம்ப்ச்..."

"கல்யாணமானவர் மீனாவோடு சந்தோஷமாக இருந்ததாகத்தானே சொன்னீங்க. மனைவி வந்தும் மாறலையா?"

“நடத்தை மேலும் விநோதமாக மாறிச்சு. மீனா என்னைவிட ரெண்டு வயசு இளையவ. பாவம் அவ… என்னன்னு சொல்வா, கேட்பா? சதா அவனோடு அறைக்குள்ளேயே அடைஞ்சு கிடப்பா…”

இருவருமே சற்று சிவந்துவிட்ட தங்களது முகங்களை மறைக்க, குனிந்து மும்முரமாகச் சாப்பிட்டார்கள்.

“அது… புதுசா கல்யாணமானவங்களுக்குள் சகஜம்தானே?”

“ஒரு மாசம்… ஒரு வருஷம் வரையிலும்கூடப் பரவாயில்லை. கடந்த ஆறு வருஷங்களா அதே கதை. தவிர…”

எதையும் என்னிடம் நீ சொல்லலாம் எனும் பாவனையில் சுஜாதா காத்திருந் தாள்.

“ஆரம்பத்தில் காலை ஏழு மணிக்கு குளிச்சு வெளியே வந்திடுவா மீனு. அவளை அண்ணின்னு கூப்பிடவே எனக்கு வரலை… பொம்மை போலிருந்த அவளை, சின்ன வயசில் அத்தனைப் பெருமையாக எம் மடியில் உட்கார வெச்சுக்குவேன். மாலையும் மஞ்சள் பூச்சுமா எங்க வீட்டு மருமகளாக வந்தப்பகூட குழந்தையாட்டம்தான் இருந்தா.”

கூடவே… கரிக்கட்டையாக வீட்டை விட்டுப் போன நினைப்பும் வந்தது போலும். இந்திரனுக்கு குரல் குழறியது.

“குழந்தைங்க எப்படியிருக்காங்க?”

“அக்காவும் அம்மாவுமாக கவனிச்சுக்கறாங்க. முன்பும் இதே நிலைதானே. மீனு கர்ப்பமானதுமே மசக்கைன்னு படுத்தவ. பிறகு எழ முடியலை… காலை பத்து, பதினொண்ணுக்குத்தான் களைப்பா அறையைவிட்டு வருவா. சந்திரன் அவ சாப்பிட்டா ளான்னு பார்க்க மதியம் வீட்டுக்கு வந்து அறையிலேயே வச்சு ஊட்டியும் விடுவான்.”

இதில் இவளுக்கு ஆச்சர்யம்தான். ஆக, மனைவி மீது கொள்ளை பாசம்தான்…

“ஆனா, என்ன சாப்பிட்டாளோ? எடை குறைஞ்சுட்டே போனது. கர்ப்ப வயிறு மட்டும் பெருக்க, உடம்பு வற்றி நரம்பா கிடந்தா. தூக்கத்துக்கு மட்டும் குறைவில்லை.”

கேட்கவே நெருடியது.

“பிறந்த குழந்தைக்குப் பாலூட்டவும் சத்தில்லை. சுண்டி சுருங்கிக் கிடந்த மகளை அக்கா திட்டினா, சந்திரனுக்குப் பொறுக்காது. ‘லாக்டஜன் வாங்கிப் போட்டிருக்கேன்ல? கரைச்சுப் புகட்டு. போதும்’னு அதட்டுவான்.

“இந்த நிலைமையில் அடுத்த குழந்தை வேற…”

“ஆமா, மூளை வளர்ச்சி போதாத ரெண்டு குழந்தைங் கறது எங்கக் குடும்பத்துக்கு பெரிய அடி, சுஜா!”

அத்தனை துக்கத்தையும் கூட்டி விழுங்கினான்.பாதிக்கு மேல் சாப்பிட முடியாமல் காபி வரவழைத்துக் குடித்தார்கள்.

“அந்தக் குழந்தைகளுக்காகத்தான் இப்ப மறு கல்யாண பேச்சா?”

“அண்ணனோட தவிப்பும்... பயங்கரமாக இருக்கு சுஜா. அறைக்குள்ளேயே, சில சமயம் ஊளையிடறதுபோல அழறான். சில சமயம் அடைபட்ட புலிபோல வெறி யாக அலையறான்.”

இவளுக்கு மறுபடி சந்திரனின் கூரிய கழுகுப் பார்வை நினைவிலோடி குத்தியது.

ஆக, சந்திரனைச் சாந்தப்படுத்த... குழந்தைகளைப் பேண... மறுகல்யாணம் பற்றி யோசிக்கிறார்கள்.

“சரி, உடனே... அதுவும் இப்படியொரு சூழ்நிலையில் பெண் கிடைச்சிடுவாளா, இந்தர்?”

உடனடியாக கலவரப்பட ஏதுமில்லை என்ற ரீதியில் இவளை சமாதானப்படுத்த, மிக மெள்ள சொன்னான்.

“மீனாண்ணிக்கு ஒரு தங்கை இருக்கா!”

கடவுளே... அடுத்த பலி தயாரா? கிலி இவளது நடு நெஞ்சைப் பொசுக்கியது!

“பெயர் கோமளா. கோளி, கோமளின்னு நாங்க சீண்டிய சின்னப் பொண்ணு எனக்கு அண்ணியாகப் போறா...”

“உங்கக்கா இதுக்கு சம்மதிப்பாங்களா? அதிலும் தன் மூத்த மகள் தற்கொலை பண்ணிட்ட பிறகு அதே இடத்துக்கு இளையவளைத் தர மனசு வருமா?”

“அக்காவுக்கு மீனு சாவில் எந்த சந்தேகமும் எழலை.பிரேத பரிசோதனை பண்ணலைன்னாலும் போலீஸ் வந்து அக்கம் பக்கத்தில் விசாரிக்காமல் இல்லை. யாருமே ஒரு வார்த்தை தப்பாப் பேசலையாம். தன் உடம்பு சீரழிஞ்சதாலும், இப்படி அரைகுறையாக குழந்தைங்க பிறந்ததாலும்தான் மீனா மனசு நொந்து தற்கொலை செய்துகிட்டாள்னு ஒருமுகக் கருத்து. சொந்தப் பாட்டிதானே மாமியார்? அவளை எத்தனை பாசமாக கவனிச்சாங்கன்றதும் தெரியும். தவிர, மீனா தனக்குத் தீ வச்சுகிட்டப்ப வீட்டுல யாருமில்லை.”

“ம்ம்...”

“என் அக்காவும், ‘பாவம், மீனுவைக் கட்டி என் தம்பி என்ன அனுபவிச்சுட்டான்? அவ உருக்குலைஞ்ச பிறகும் முகம் சுளிக்காம சோறூட்டி, அத்தனையும் வாங்கிப் போட்டு அவளைத் தங்கத் தட்டுலல்ல ஏந்தினான்! இனி அவனையும் எம் பேத்திகளையும் பார்த்துக்க கோமளிதான் சரி’ன்னு சொல்லிடுச்சு.”

“அக்கா வீட்டுக்காரர் மறுத்துப் பேசலையா?”

“கோமளிக்குக் கீழே ரெண்டு உதவாக்கரைப் பசங்க உண்டு. இதுவரை வந்த வரன்கள் நீட்டிய சீர்ப்பட்டியல் ரொம்ப நீளம். ஆக, இவளையும் செலவில்லாமல் கரையேற்றிடலாம்ன்ற வேகம் அத்தானுக்கு...”

வெகு எளிமையாக நடந்தது சந்திரன் - கோமளாவின் திருமணம்.

இடதுபுறம் சற்று பேக்கு முழியுடன் இரு பெண் குழந்தைகள் உரசி நிற்க, கழுத்து மாலையும் கழுகுப் பார்வையுமாக சந்திரன். அவனது இடப்புறம், 'சிரிக்கவா, வேண்டாமா' என்ற தயக்கத்துடன் கோமளி.

அந்தப் புகைப்படம்தான் சுஜாதாவுக்குக் காண கிடைத்தது. ஆனால், அதுவே கண்ணோடு கருத்தையும் உறுத்தியது. சுஜாதாவோடு அதைப் பார்த்த மற்ற அறை சிநேகிதிகளின் பார்வையில் எந்த பூரிப்புமில்லை.

"ரெண்டாம் மாசமே... ரெண்டாங்கல்யாணம். ம்ம்?"

அன்று இவர்களைப் பார்த்து போக வந்த லலிதாவும் அந்தக் கல்யாணப் படத்தை உற்றுப் பார்த்தாள்.

"என்ன லத்தி லலி... உன் போலீஸ் பார்வை என்ன சொல்லுது?"

ரமணி கேட்டதும் லலிதாவின் நெற்றி மேலும் சுருங்கியது.

"பய முழி நேராயில்லை. நிழலடிக்குது. ஏதோ இந்த குட்டிப் பொண்ணாவது நல்லாயிருந்தா சரி."

**ஞா**பகமாக மூன்று மாதங்கள் கழித்து சுஜாதாவைக் காரியமாக விசாரித்தாள் லலிதா.

"அந்தப் பய... அதான், உன் ஆளோட அண்ணன் எப்படி வச்சிருக்கான் தன் பெண்டாட்டியை?"

"தெரியலை லலி... இந்திரன் முகம் சரியில்லை. நாங்க அடிக்கடி சந்திக்கறதுமில்லை. என்னைப் பார்ப்பதைத் தவிர்க்கிறாரோன்னுகூட படுது... ஆக ஏதும் கேட்க முடியலை."

"உங்கக் கல்யாணத்தைப் பற்றி என்ன முடிவெடுத்து இருக்கீங்க?" - போலீஸ் தோரணையில் விசாரித்தாள்.

"இப்ப அதற்கான சூழ்நிலை இல்லையே."

"நல்லது. பொறு... பார்ப்போம்."

தரையைத் துளைப்பதுபோல பார்த்திருந்த லலிதா, பின் சட்டென்று மாற்றிப் பேசினாள்.

"எதுக்குப் பொறுக்கணும்? அவங்க வீட்டுக்கே போய் பார்த்துடேன், சுஜா..."

ரமணி கிண்டலாக சிரித்தாள். "அக்மார்க் போலீஸ் பேச்சு! எங்கேயும் நுழைய எங்களிடம் வாரன்ட்டா இருக்கு லலி? இப்ப நடந்த சந்திரன் கல்யாணத்துக்குக்கூட சுஜாவால போக முடியலை. கூட்டத்தோடுகூட கலந்து நிற்க முடியாதவ, அவங்க வீட்டுக்கு எப்படி போக முடியும்?"

"யாருமில்லாத சமயமாப் போ... கொஞ்சம் உருட்டிப் பாரு. அவங்க கண்ல படாதது நம்ம கண்ல படும்."

"என்னது... எது?"

“குற்றம் நடந்த இடத்தை அலசறதுலதான் இருக்குது விஷயம். நுணுக்கமா தேடினா பெரும்பாலும் நுனிநூல் சிக்கிடும்.”

இவளுக்குள் சுண்டியது.

லலிதா சொல்ல வருவது என்ன? என்ன குற்றம்? நான் போய் ஆராய்ந்து... அறியுமளவில்... அப்படித் தேட... என்னென்ன தெரியவரும்?

எதையும் சுஜாதா வாய்விட்டுக் கேட்கவில்லை.

இந்திரனின் வீட்டை விட்டுத் தர மனமில்லை. ஆனால், புத்தியில் விழுந்த விதை முளைத்தது. அதற்குக் காலம் துணை செய்தது.

மகள் கோமளி மாசமாயிருக்கும் தகவல் அறிந்து, அவளைப் பார்க்க தாய் வீட்டுக்கு வந்திருந்தாள் சுகிர்தம்.

குளித்து சாப்பிட்டானதும் தாய் பாலம்மாவும் சுகிர்தமும் வழக்கமான சமையல் திண்டில் உட்கார்ந்து கம்மிய தொனியில் பேச ஆரம்பித்தனர்.

“ஏம்மா, எப்படியிருக்கே?”

“இருக்கேன்.”

“கோமளி?”

“நல்லாத்தான் இருக்கா... எனக்குத்தான் பழைய பயம் போகலை. இவ கொஞ்சம் அசந்து படுத்தாலும் பக்குன்னுது.”

“அசந்துன்னா?” - கலவரத்தை சுகிர்தம் குரலில் காட்டாவிட்டாலும், கண் காட்டிக் கொடுத்தது. அதை மறைக்க, பீன்ஸை நார் நீக்கி நறுக்கலானாள்.

“கல்யாணமான புதுசு... அசத்தும். தவிர, பிள்ளை யாண்டிருக்கால்ல?”

“ஏழுக்குள்ளே குளிச்சு, பளிச்சுனு வெளியே வந்திடணும்னு சொல்லியிருக்கேன். நீயும் கண்டிச்சு வைம்மா. சிறுசுகளைப் பாங்கா கவனிச்சுக்கறாள்ல?”

பாலம்மாவின் கண்களில் நீர் கோர்த்தது.

“விஷயத்தை சொல்லும்மா. எனக்கு பக்குன்னுது.”

“சந்திரனுக்கு மகளுங்களைக் கண்டாலே ஆகலைடீ. அறைப் பக்கமே வரக் கூடாதுங்கறான்.”

“கோமளி உங்கிட்ட அனுசரணையா இருக்கால்ல?”

“அவளை எங்கே வெளியே விடறான்? அல்வாவை இலையில் இட்டு கசியாதபடி கட்டறாப்பல தனக்கே தனக்குன்னு வச்சுக்கறான்.”

சுகிர்தத்துக்கு இது புரிந்தது. மீனுவையும் தாய் வீட்டுக்கு அனுப்ப நூறு தரம் யோசித்து, பின் மறுத்து விடும் ரகம் அவன்! பிரசவத்துக்கு ஒன்பதாம் மாதம் அவளை அனுப்பி, பின்னோடு தொடர்ந்து விடுவான்.

“வீட்டைக் கவனிச்சுக்கறான்ல?”

“காசைத் தந்துட்டு - இத்தோட என்னைய விட்டிருங் கறது போல ஒரு நடத்தை. எதையும் அழுத்திக் கேட்க, சொல்ல முடியலைடீ... முறுக்கிக்கிட்டு தனியே போயிட்டான்னா? நாம ரொம்ப பணிஞ்சு போயிட்டதால, அவனுக்கு யாருகிட்டேயும் பயமில்லை. ஒரு பார்வை பார்த்தான்னா எனக்குத்தான் நடுங்குது - கண்டிச்சு வளர்த்திருக்கணும்.”

“கண்டிக்கறாப்பல சந்திரன் ஏதும் செய்யலியேம்மா. சதா அறைக்குள்ளே பூட்டிக்குவான். ஒதுங்கியே வளர்ந்தான். மற்றபடி படிப்பு, வேலைல சூட்டிகைதானே?”

“என்னவோ... கோமளியாச்சும் சுகப்படணும்.”

“டாக்டர்கிட்ட செக்-அப்புக்கு போனாளா?”

“அதுக்கு முன்ன நம்ப ஊர் கோயிலுக்கு ஒரு தரம் போயிட்டு வரணுமே சுகி... மனசு நிம்மதியாயிருக்கும். காணாக்கடிம்பாங்க கிராமங்கள்ல - திடீர்னு சுள்ளுனு வீங்கும். ஆனா, எந்த பூச்சி கடிச்சதுங்கறது தெரியாது. அதுக்கு பூவரசம் மரப்பட்டை பூச்சுதான் மருந்து. மூத்தவன் மனசுக்குள்ளே என்ன இருக்குது, படுத்துதுனு எனக்கு புரியல... ஆனா, அதுக்கு கடவுள் அருளுதான் மருந்துனு படுது!”

இந்த யோசனையில் இருவருக்குமே திருப்திதான்.

“ஆனா, கோமளியை அனுப்ப மாட்டானேம்மா. அவனும் கோயில்னா மூஞ்சியத் திரும்பிக்கிற ஆளு.”

“கோமளி கேட்கட்டும்... எல்லாருமா சேர்ந்து போய் கோயில்ல பொங்கல் வச்சிட்டு வரணும்... மூணாவது முத்தாட்டம் பிறக்கணும்னு...”

கோமளி சற்று அசந்து தெரிந்தாலும் தாய்மையின் பெருமிதத்தோடு இருந்தாள். பெரியவர்களின் கோரிக்கையை நயந்து, பயந்து புருஷனின் காதில் போட, ‘காலைல போய் அதே நாளு வீடு திரும்பிடணும்’ என்றவன் சம்மதித்ததில் குடும்பத்தில் திருப்தி.

அந்த வெள்ளிக்கிழமை... ஒரு ஸ்வராஜ் மஸ்தாவில், பொங்கலிட சகல பொருட்களோடு குடும்பமாகக் கிளம்பினார்கள். “எனக்கு ஸ்டாக் செக் பண்ணும் சமயம்... வர முடியாது!” என்று பின்தங்கினான் இந்திரன்.

**சு**ஜாதா தன் வீட்டினுள் நுழைந்ததுமே அவசர அவசரமாக வாசற்கதவை மூடி தாழிட்டான் இந்திரன்.

“யாரும் பார்த்துட்டா வம்பு... அம்மாகிட்ட நீ வந்ததைச் சொல்லிட்டா?”

“நம்ப கல்யாணம் சீக்கிரமாக நடக்கும்!”

இவளது முறுவலுக்கு இணையாக இந்திரனின் முகத்தில் மகிழ்வில்லை.

ஆக வீட்டைப் பார்த்தாள். வீட்டை தாங்கி தாங்கியே இளைத்து விட்டதுபோல சற்று ஒடுங்கிய மரத்தூண்களைத் தடவியபடி பாராட்டினாள்.

“காத்திரமான வீடு… இப்போல்லாம் இது போலக் காணக் கிடைக்கறதில்லை.”

“ஆரத்தி எடுத்து நீ நுழையவேண்டிய வாசப்படி…”

“இப்பவும் கடவுளை மனசார வேண்டியபடிதான் அடியெடுத்து வச்சேன்…”

“காபி கலக்கவா?”

“ம்ம்… முறுக்கு வாங்கிட்டு வந்தேன். சாப்பிட்ட பிறகு அறையெல்லாம் பார்க்கலாம்.”

“எனக்குப் படபடங்குது சுஜா. நீயான்னா பிக்னிக் வந்தது போல பேசறே…”

“அபூர்வமாக அமைஞ்ச சந்தர்ப்பம்… உங்க வீட்ல எல்லாரும் பொங்கல் வைக்க ஊருக்குப் போயாச்சு… நீங்களும் உங்கண்ணன் அறைக்கு மாற்று சாவியை உருவாக்கிட்டீங்க.”

“மனசு சஞ்சலமா இருக்குது.”

“அது நீங்கி வீட்ல அமைதி வரணும்ல?”

“ம்ம்… அதுக்குத்தான் இதெல்லாம்?” - கையிலிருந்த சாவியைப் பார்த்தான்.

இருவருமாக சேர்ந்து காபி கலந்தார்கள்.

சமையலறை அப்படி ஒன்றும் சுத்தமாக இல்லை. பாட்டில்களின் எல்லா மூடிகளிலும் எண்ணெய்ப் பிசுக்கு. இந்த வீட்டின் மருமகளாக வந்ததும், இவற்றை வெந்நீரில் ஊற வைத்துக் கழுவுவதுதான் முதல் வேலை என்று தீர்மானித்தாள்.

“அம்மா தளர்ந்துட்டாங்க சுஜா… அதிகம் முடியலை. வேலைக்காரி வச்சா, நம்ப வீட்டு விவகாரம் வெளியே கசியுமேங்கிற அச்சம். கோமளியும் இப்பல்லாம் அறையை விட்டு வர்றதே சாப்பிடத்தான்…”

மூத்தவள் மீனாவுக்கு வந்த அதே கோளாறு!

“மசக்கைங்கிறாங்க… ஆனாலும், நெருடுது. கோமளி யையும் நாம இழந்துடக் கூடாதே. ரெண்டு பிஞ்சு களையும் பார்க்கறப்ப உள்ளே ரணமாய் வலிக்குது சுஜா. அதான் வர்றேன்னதுமே உன்னைத் துணிஞ்சு கூட்டிட்டு வந்துட்டேன்.”

இந்திரன் முகத்தில் அச்சம். இந்தக் கள்ளச் சாவியால் சந்திரன் அறையைத் திறந்தால், உள்ளே என்ன காண நேருமோ என்ற கலக்கம்!

“இதுபோல நான் பயந்ததே இல்லை சுஜா…”

அவனுக்கு மிக வியர்த்திருந்தது. அந்த அறைக்குள் நுழைந்தபோது சுஜாதாவுக்கும் உடம்பு நடுங்கித் தளர்ந்திருந்தது.

காட்டின் ஒரு இருட்டுக் குகைக்குள் நுழையும் கிலி! ‘உள்ளே என்ன விதமான மிருகம் இருக்கும்? எந்த நிமிடம் என் மீது பாயும்? இங்கிருந்து உயிரோடு மீள்வேனா?’ - அச்சக் கேள்விகள் அவளை உலுக்கின.

உள்ளே நுழைய, காலுக்கடியே பூரான்கள் நெளிவது போலொரு அருவெறுப்பு. இனம் புரியாத புது வாடை... நெடி...

கல்லூரியில் மனோதத்துவம் கற்பிக்கும் ஜான்சி விளக்கிய ‘நிழல் வாழ்க்கை’ தத்துவம் இப்போது நினைவுக்கு வந்தது...

‘ஒரு குகையில் சில மனிதர்கள் விலங்கிடப்பட்டு உட்புற சுவர் நோக்கி உட்கார்ந்திருக்காங்க - அவர் களால் கழுத்தைக் கூட அசைக்க முடியாது. பின்னாலிருக்கும் நெருப்புதான் ஒரே வெளிச்சம். குகை வாசலில் நிகழும் சம்பவம், போக்குவரத்தெல்லாம் அவர்களுக்கு முன்னிருக்கும் சுவரில் நிழலாகத் தெரியும். கூடவே வெளியேயிருந்து கசியும் குரல்களோடு... அவர்களால் வெளி உலகை நேரடியாகப் பார்க்க முடியாது. பார்த்தால் அதிர்ந்து போவார்கள். அது புரியாமல் நாம் அவர்களுக்கு இடும் பெயர்தான் - ‘பைத்தியம்’.

வெளி உலகின் நிஜத்தை நிழல் மனிதனால் தாள முடியாது - உண்மைக்கும் பொய்க்கும் இடையிலான வித்தியாசம் இது. நாமும் ஒரு விதத்தில் குகை மனிதர்கள். நாம் பார்ப்பதெல்லாம் நிஜமல்ல... நிழலாகவும் இருக்கலாம்!”

“போதும்டீ... இத்தனை குழப்பமான ஒரு விளக்கத்தை நான் கேட்டதேயில்லை...”

ரமணி தடைபோட, ராஜியும் சேர்ந்தே கிண்டல டிப்பாள். “இத்தனை ‘விளக்கமா’ சொல்லிக் கொடுத்தா உன் மாணவிகள் தேறினதுபோலத்தான்... போ.”

**சு**ஜாதாவுக்கு நடுங்கியது. ஒரு நிழல் மனிதனைப் பார்க்கப் போகும் பதட்டம்...

“ஜன்னலைத் திறந்து விடுங்களேன் - காற்று வரட்டும்...”

அவன் முயல, அது சண்டித்தனம் செய்தது - திறக்கவே படாத ஜன்னல் போலும்.

“விடுங்க - அவர் வந்து ஜன்னல் திறக்கப்பட்டதைப் புரிஞ்சுக்கிட்டாலும் வம்பு...” என்றபடி நிதானமாகப் பார்வையிட்டாள்.

பதினைந்தடி சதுரத்தில் அறை. சமீபத்தில் பெருக்கப் படாத தரை. நடுவே அகண்ட கட்டில் - அதில் கலைந்த போர்வைகள். எண்ணெய் தடமுடன் தலையணைகள்.

சுவருக்கொன்றாக இரு அலமாரிகள். அதன் மேலும், எங்குமென இறைபட்ட பொருட்கள், காகிதங்கள். கட்டிலின் எதிர் மூலையில் டி.வி, சி.டி. பிளேயர் - அதை ஒட்டிய குட்டை இழுப்பறையைக் குனிந்து திறந்தாள். அடுக்கடுக்காக வட்ட வெள்ளித் தகடுகளாக சி.டி-க்கள்!

“இதில் ஒன்றைப் போடுங்களேன், இந்தர்.”

வாங்கிய அவனது விரல்கள் சருகாக நடுங்கின.

காட்சித் திரையை எட்டுவதற்குள் இருவரும் வியர்வை யில் நனைந்திருந்தார்கள். ஃபேனை சுழல விட்டாள். பதினைந்தாம் நிமிடம் முகம் சிவந்து, கண்கள் வழிய அறையை விட்டு வெளியேறி விட்டான் இந்திரன். தானும் தாள முடியாமல் அந்த சி.டி.யின் சுழற்சியை நிறுத்தி, எடுத்த இடத்திலேயே அதை வைத்தாள்.

உடம்பு முழுக்கக் கூசியது... எத்தனை ஆபாசமான மனசு? இங்கிருக்கும் அத்தனையும் காமத்தை மையமாகக் கொண்டு, அதைக் கொச்சைப்படுத்தும் படங்கள் தானோ?

புத்தகங்களை உருவிப் புரட்டினாள். அவையும் அதே ரகம்தான். கேள்விப்படாத எழுத்தாளர்களின் விநோத எழுத்துக்கள். மனோதத்துவம் பற்றியும் சில...

அலமாரியின் மேல்புறத்தை, ஒரு ஸ்டூலில் ஏறித் துழாவினாள். வெளிப்பட்ட பல்லியைக் கண்டு துணுக்குற்று கையை உதற, ஒரு புத்தகத்தின் இடையேயிருந்து நழுவி விழுந்தது, அந்தச் சாவி.

எப்போதோ மறந்துபோன சாவி அல்ல... புழக்கத்தில் இருப்பதுதான் என்றது அதன் பளபளப்பு. அதைக் கொண்டு அலமாரியைத் திறந்தாள்.

மேல்தட்டின் மரப்பெட்டி ‘கிளுகிளு’வென குலுங்கியது. கூடவே, கனத்த ஆல்பம். இரண்டையும் கீழே இறக்கினாள்.

பெட்டியின் உள்ளே நிறைய காலியான சிறு கண்ணாடி குப்பிகள். ஊசிக்கான மருந்தை இது போன்ற குப்பிகளில் பார்த்திருக்கிறாள். மாத்திரைப் பட்டைகள் - ஊசி போடும் சிரிஞ்சுகள் - எதற்காக இத்தனை? யாருக்கான சிகிச்சை?

ஒன்றை மட்டும் தன் கைப்பைக்குள் பத்திரப்படுத்தினாள். ஆல்பத்தைத் திறக்க, முதல் பக்கத்தில் மீனாவுடனான திருமணப் படம்... மாலையும் மகிழ்வுமாக...

ஆனால், பக்கங்களைப் புரட்டப் புரட்ட, அவளது நெஞ்சு உலர்ந்தது. பார்த்த விழிகள் விக்கி விரிந்தன....

**“இ**த்தனை நடந்திருக்கு... நேற்று நீ வாயே திறக்காம படுத்திட்டே?” - வியந்த ரமணி, காலியான நான்கு காப்பி கோப்பைகளையும் எடுத்தாள்.

“ஆனா, ஒரு பொட்டுத் தூங்கலை... அவ கண்ணைப் பாரு...”

“ச்சே, பயங்கரம்! சைக்காலஜியில் எத்தனையோ படிக்கறேன்... ஆனாலும், கண் எதிரே பார்க்கறது... பாவம் சுஜா... நீ!” - தோழியின் முதுகை நீவினாள் ஜான்ஸி.

“என்னைவிட இந்திரனுக்கு பாதிப்பு அதிகம். சி.டி.யில் பார்த்த ரெண்டு காட்சியே அவருக்குத் தாங்கலை... மீனா அவருக்கு அண்ணி மட்டுமல்ல, அக்கா மகள்! அவளை அந்தக் கோலத்தில் தன் அண்ணனோடு பார்க்க அவருக்குப் பொறுக்காது - ஆக ஓரளவு விவரம் மட்டும் சொன்னேன். அடுத்த அலமாரி யில் வீடியோ கேமரா போன்றவை இருக்கும்னு யூகம்.”

“ச்சே... மிருகமாக ஒரு கூடப்பிறந்தவன்...”

“மிருகமேதான். ஆல்பத்தின் முதல் பக்கத்தில் பூ போலிருந்த மீனாவை பிறகு வக்கிர குரங்காகப் பிய்த்து விசிறியிருந்தான்.”

“சந்திரனின் அழுக்கு மனம்... அதில் ஊற்றெடுத்த அசிங்க ஆசைகளை எல்லாம் தீர்த்து வைக்கத் தோதாக அந்த அப்பாவிப் பெண் சிக்கியிருக்கா. அவளை மருந்து, மாத்திரை மூலம் மயங்கப் பண்ணி அவ உடம்பில் தன் வக்கிரங்களை வடித்திருக்கான். நீ அவன் அறையிலேருந்து எடுத்து வந்த அந்த மருந்து குப்பி - போதைக்கானதுதான்!”

பிற பெண்களின் முகம் கசந்து வெளுத்தது.

“அதான் மீனாவின் ஆரோக்கியம் பாழாகி இருக்குது!”

“சில மனுஷ மனங்கள் குகை போல... அதை எட்டிப் பார்த்தால் நாம தாங்க மாட் டோம். ‘வாயுரிஸம்’னு கேள்விப்பட்டிருப் பீங்க. சாவித் துவாரத்தின் வழியே பிறர் அந்தரங்கங்களைக் கண்டு அதிலே இன்ப மாவது. அதுபோல எத்தனையோ குரூர குளறுபடிகள். சடலத்துடன் கூட...”

மிகவும் மிரண்டு வெளுத்த தோழிகளின் முகம் கண்டு பேச்சை நிறுத்திக் கொண்டாள் ஜான்ஸி.

“நாம இவனுங்களை மிருகம்னு சொல்லக் கூடாது. அதுகளில் இப்படியான ஆபாச குதர்க்கம் கிடையாதே...”

“முழுக்க அவங்களைக் குறை சொல்ல முடியாது ராஜி. பிறவிக் குற்றவாளிகள்னு சிலருண்டு. அது அவங்க மரபணுவில் பொதிந்த ஈனம். ‘சைக்கோ பாத்’னு சொல் வாங்க. அவங்க கொடூரமானவங்க மட்டு மல்ல; தங்களின் குற்றங்கள் பற்றி தெளி வான புரிதலும் இருக்காது. சுருங்கச் சொன்னால் அவர்களுடையது மனசாட்சி அற்ற உடற் கூறு!”

“வேலி இல்லாத வீடு போல...”

“ரொம்ப சரி. ஒரு ஜெர்மன் நிபுணர் இந்த மாதிரி குற்றவாளிகளின் ‘ஆர்பிட்டோ ஃபிரன்ட்டல் கார்டெக்ஸ்ஸை சோதித்தால்...”

“அதென்னது?” - விழி விரித்தாள் ராஜி.

“மூளையின் இந்த பகுதியைத்தான் நாம் ஒரு நெருக்கடியில் முடிவெடுக்க பயன் படுத்துவோம். இதை ஆராய்ந்தால் தெளி வான விடை கிடைக்கும்ங்கறார். இது பிறவிக் குறைங்கறதால இவங்களைத் திருத்தவும் முடியாது... தண்டிக்கறதுக்கும் வழியில்லை.”

ஜான்ஸி விளக்க, ராஜி தன் தோளைக் குறுக்கி, நடுங்கினாள்.

“ச்சே... அந்த மீனாப் பொண்ணு அரை மயக்கத்திலேயே தன் தாம்பத்யத்தை கழிச்சிருக்கா. போதைக் கிறக்கத்தில் பசி மங்கி, உருக்குலைந்து, பிறந்த குழந்தைகளும் அரையும் குறையுமாகி...”

“ஒருநாள் தன் புருஷன் தன்னைப் பயன் படுத்தி எடுத்த கோரப் படங்களை மீனா பார்த்திருக்கணும். மயங்கிய தன் உடல் வக்கிரத்திற்குப் பயன்படறது புரிஞ்சு... அது தாளாம தன்னையே எரிச்சுக்கிட்டா போல...”

“தப்பு பண்ணிட்டா! விவரத்தை அம்மா, பாட்டியிடம் சொல்லாமல் உயிரை விட்டு என்ன பயன்? இப்ப அவ தங்கையும் அதே கிணற்றில் இல்லே விழுந்திருக்கா?”

“கோமளியைக் காப்பாற்றத்தான்… அத்தனை யையும் உங்ககிட்ட சொல்றேன்.”

“ச்சே… அவ கர்ப்பம் வேறனு சொன்னே.”

“கலைச்சிடணும். சந்திரன் மரபணு கோளாறால் இப்படி நடந்துகிட்டார்னா, அதே குணம் அவன் குழந்தைக்கும் அமையக் கூடுமே?” - ஜான்ஸி கவலைப்பட்டாள்.

“அப்பாவின் கண்டிப்பில்லாமல் வளர்ந் தவன். ஆபாச புத்தகம், படம்னு புத்தி வக்கிர மாக வளைஞ்சிடுச்சு. தவறான சகவாசம், கையில் பணம்… இது அத்தனையும் கூடியதன் விளைவாகவும் இருக்கலாம். அவனோட நண்பன் ஒருத்தன் மெடிக்கல் ரெப்பாம். அதான் மருந்து கடைகளில் எளிதாக கிடைக்காதவையெல்லாம் அவனுக்கு கிடைச்சிருக்கு.”

“நண்பர்கள் வீட்டுக்கு வர்றதுண்டா? அறைக்கு?”

“இல்லையாம்… விதவிதமான உயரங்கள்ல மூணு ஸ்டூலுங்க இருந்தன. அதன்மேல் காமிராவை செட் செய்து…”

“ச்சே… வயிறு கலங்குதுப்பா. இனி ஒரு வாரத்துக்குத் தூக்கம் பிடிக்காது. விவரத்தை போலீஸ்கிட்ட சொல்லிடறதுதான் சரி…”

“ப்ளீஸ் பொறுங்க. வீட்டுப் பெரியவர்கள் கிட்ட இந்திரன் சொல்லியிருப்பார்… அவங்க அந்த முடிவை எடுக்கட்டும்.”

“இது மாதிரி சோதனையில் குடும்பத்தார் ஒருத்தருக்கொருத்தர் ஆதரவுதான்… வெள்ளத்தில் எறும்புங்க எல்லாம் ஒரே பந்தாகத் திரண்டு மிதந்து தப்பிடுமாம்.”

“நோ! இந்த ஆள் தப்பிடக்கூடாது…”

“நீ கவனமாக இருக்கணும் சுஜா. இது மரபணு தகராறுன்னா, கூடப் பிறந்த இந்திரனுக்கும்…”

“ஒரே கோயிலின் கோபுரத்தில் புறாக்களும் பிராகாரங்களில் வௌவால்களும் வசிப்ப துண்டு ஜான்ஸி!” - சொன்ன சுஜாதா நெகிழ் வுடன் தன் சிநேகிதிகளைப் பார்த்தாள்… பெற்றவர்களின் கரிசனையைக் காட்ட, தனக்கும் சிலருண்டு என்ற ஆசுவாசம்…

மிரண்ட மனம் சற்று அமைதிப் பட்டது.

“இப்ப பிரச்னைக்கு வா… சந்திரன் ஆபத்தானவன்றதை வெளிப்படுத்தணும். கோமளியைக் காப்பாற்றணும். அதுவும் சீக்கிரமாக…”

**ஆ**னால், சற்றைக்கெல்லாம் வந்த செய்தி அவர்களை திகைக்கவிட்டது.

“என்ன இப்படியாயிருச்சு?”

“புரியலியே…”

“எல்லாருக்கும் விஷயம் தெரிஞ்சிருமேன்னா?”

“மனசாட்சி இல்லாத மிருகம்னே... பிறகெப்படி அஞ்சினான்?”

“யார் அவனிடம் விவரத்தைச் சொல்லியிருப்பா?”


ஒருவருக்கொருவர் மாறி மாறி கேட்டு, மேலும் மேலும் குழம்பினார்கள்.

“இந்த மர்மம் லேசில் அவிழாது போல...”

“முடிச்சை பிரிச்செடுக்க முடியலைன்னா... வெட்டி டறதுதான்...”

“அதைத்தான் செய்துட்டாங்கன்னு நினைக்கறேன்... ஏன்னா, இது ஒண்ணுதான் வழி... விவேகமான வழி!”

பாதி தனக்குள்ளாகப் பேசிய ஜான்ஸியை மற்ற மூவரும் குழப்பமாகப் பார்த்து நின்றனர்.



**ந**டந்தது இதுதான்... கோவிலில் பொங்கலிட்டு விட்ட நிறைவான அசதி யுடன் அந்த குடும்பம் வீடு திரும்பியது, அந்தி நேரம்.

பாத்திரம், பொருட்களை இறக்கியபடி சந்தோஷமாக சலசலத்தார்கள்.

“கோமளி, நீ குளிச்சுட்டு படு... நான் ஒரு ரசம், கூட்டு வச்சுட்டு உன்னைக் கூப்பிடறேன்..”

சமையலறைக்குள் நுழைந்த மூத்த இரு பெண்களுக்கும் அங்கே இந்திரனைக் கண்டதில் ஆச்சர்யம்.

“என்னடா... இங்கே நிக்கறே?”

“அத்தான் வரலியா?” கேட்டான்.

“வேலைன்னு ஊரிலேயே இறங்கிட்டாரு.”

அவன் பேச ஆரம்பித்தான். முதலில் தயங்கினாலும் பிறகு மடை திறந்தது.

கேட்ட இரு பெண்களுக்கும் கூசியது; கொதித்தது. ‘ஐயோ நாம் பெத்தவனா இப்படி’ என்றும்... ‘இவனுக்கா என் இரு கண்களையும் பலியிட்டேன்... கடவுளே! உன்னைக் கும்பிட்ட என் வினை இன்றோடு தீர்ந்ததே’ என்றும்!

“உஷ்... சத்தம் வேணாம். கோமளியிடம் சொல்லி யிருங்கம்மா... இனி அவன் தர்ற எந்த மருந்தையும் மறுத்திடணும்னு! பட்டை பட்டையாக வச்சிருக்கான் அந்த விஷத்தை...”

“மெச்சிக்கிட்டாளே பாவி மக... இழவு புரியாம - ‘மாமா எனக்குச் சத்து மாத்திரையெல்லாம் தந்து கவனிக்கிறாரும்மா’னு...” விம்மினாள் பெற்றவள்.

“போதை ஊசியும் கூட போட்டு...”

“மீனு கண்ணு உடம்பையும் துளை போட்டு அவ உயிரை உறிஞ்சிட்டானா..”

இந்திரன் இந்தப் புலம்பலை எதிர்பார்த்து வீட்டின் கதவை, அறைக் கதவைச் சாத்தியிருக்க, ஆரம்ப அதிர்ச்சியை அழுகை தொடர்ந்தது.

“அவன் எச்சரிக்கை ஆகிடக்கூடாது. அதைவிட முக்கியம் கோமளியைக் காப்பாத்திடணும். அவகிட்ட சொல்லி...”

“வேண்டாம்டா... அந்த குருத்து இதெல்லாம் தாங்காது.” - பாலம்மா முந்தானையால் தன் முகத்தை அழுந்தத் துடைத்தபடி சொன்னாள்... “விவரத்தைச் சொல்லிட்டேல்ல... விடு இந்திரா! இனி பெரியவங்க நாங்க பார்த்துக்கறோம்.”

பெண்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

“சுகி, ரசத்துக்குப் புளியை கரை - அரைமணி நேரத்துல எல்லாரும் சாப்பிட வந்திருவாங்க.”

இந்திரன் குழம்பி நின்றான்.

“செய்த மாத்து சாவிய எங்கிட்ட கொடு இந்திரா!” - தாய் கேட்க, எடுத்துத் தந்தான்.

பெண்கள் வாய்மூடி சமையலில் மும்முர மானார்கள்.

ஒன்பது மணிக்கெல்லாம் வீடெங்கும் பருப்பு பாயசத்தின் வாசனை... சந்திரனுக்குப் பிடித்த இனிப்பு அது!

மூத்தவனுக்கு பெற்றவள் பார்த்துப் பார்த்துப் பரி மாறியதை இளையவன் விநோதமாகப் பார்த்திருந்தான்.

“கோமளி சாப்பிட்டாச்சா?”

“முதல்ல இலை போட்டது அவளுக்குத்தான். நீ சாப்பிடு...”

தம்பி சந்திரனுக்காக, ஆவி பறக்கும் பாயசத்தோடு வர, இந்திரனுக்குள் இனம் தெரியாத குமட்டல்... தாள முடியாமல் வெளியேறினான்.

வெகுநேரம் கழித்து வீடு திரும்பிய இந்திரன் சாப்பிடவும் இல்லை. வெற்று வயிறும் வேதனையுற்ற மனமும் அவனை உறங்கவிடாது அலைக்கழித்தன.

அதிகாலையில் அசந்தவனை வீட்டின் ஓலம் உசுப்பியது.

“ஐயோ, என்னை விட்டுட்டு போயிட்டியா ராசா?”

“போனவளைத் தேடி நீயும் கிளம்பிட்டியா?”

இவன் அலமலந்து எழுந்தான்... அவசரத்தில் பாதம் இரும்பு கட்டிலில் நச்சென இடித்தது.

திறந்து விட்டிருந்த வாசற்கதவின் வெளியே அண்டை வீட்டார் கூட ஆரம்பித்திருந்தனர்.

“என்னாச்சு... ஏதாச்சு?” என்ற பதட்டம்.

“இப்பதான் இருபது நிமிஷமிருக்கும். என்னைய எழுப்பி, ‘அக்கா, நெஞ்சை அடைக்கறாப்பல இருக்குது... தண்ணி கொடு’ன்னான். அதுதான் கடைசிப் பேச்சு...”

கட்டையாகக் கிடந்த சகோதரனைப் பார்த்த இந்திரனுக்கும் உடம்பு உறைந்தது.

“அவன் தண்ணியைக் குடிக்க, நெஞ்சை நீவி விட்டேன்... சட்டை பூரா வியர்வையில் நனைஞ்சு போச்சு. படுத்தவன் மூச்சுத் திணறி... அப்படியே அடங்கிட் டானே... என் தங்க மருமவனே... ஐயோ எம் பொண்ணு மாங்கல்ய ஈரம் காயறதுக்குள்ளே அறுத் தெடுத்துட்டுப் போயிட்டியேப்பா...”

முட்டி மோதி கதறினாள் சுகிர்தம்.

“நல்லாத்தானே இருந்தான்.. இதென்ன கோரம்?”

“மூத்தவ இறந்ததிலிருந்தே தம்பி சரியில்லங்க. அதான் இத்தனை அவசரமாக மறுகல்யாணம் செஞ்சோம். அவன் ‘நெஞ்சைக் குத்துது, தோளு வலிக்குது’ன்னதைப் பெருசா எடுத்துக்கலை... இப்ப இப்படி வாரி கொடுத்துட்டு... ஐயோ...”

புலம்பிலிலேயே எல்லாருக்கும் வேண்டிய விவரம் சொல்லப்பட்டது. ‘இப்ப இளந்தாரிகளுக்கும் மாரடைப்பு சகஜமாப் போச்சு...’ ஏற்று ஆமோதித்தது கூட்டம்.

சந்திரனின் அறைக்குள் மாற்று சாவியிட்டு நுழைந்து, அங்கிருந்த மாத்திரைகள் அத்தனையையும் கொதித்த பாயசத்தில் தன் தாயில் சொல்படி கலந்து, தம்பிக்குப் பரிமாறியதை சுகிர்தம் மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியமில்லை!

அதிர்ச்சியும் அழுகையுமாகக் கலந்து தவித்தாள் கோமளி.

“ஐயோ... என்ன அசதியோ இப்படி உறங்கிட்டே னேம்மா... அவரு உன்னைய எழுப்பினது கூட அறியாத... எங்கிட்ட ஒரு வார்த்தைப் பேசலியே... மாமா.. மாமா...”

அவன் பாதங்களைத் தன் தலையில் பதித்துக் குமுறினாள்.

கைக்கு ஒரு பேத்தியாக இறுகப் பற்றிக் கொண்டு கூரையை வெறித்தபடி இருந்தாள் பாலம்மா!

**ஓ**ரமாக நின்று அத்தனை அவலங்களையும் கண்ட சுஜாதாவினுள் அலை அலையாக துக்கம்.

வீடு திரும்பி, தலைக்கு ஊற்றிய கையோடு அந்தக் கடிதத்தை எழுத உட்கார்ந்தாள்.

இன்றும் வானம் தூறி, சற்று மப்பிட்டிருந்தது.

மேஜை விளக்கை எரிய விட்டவள் நிதானமாக எழுதினாள். ஆதரவாக தன்னருகே வந்து தோள் பற்றிய ஜான்ஸியிடமிருந்து கடிதத்தை அவள் மறைக்கவுமில்லை.

“என்ன சுஜா, ஆபீஸில் மாற்றல் கேட்டு எழுதறே?”

“பெங்களூர் பிராஞ்சிற்கு ஆள் தேவைனு பேச்சிருந்தது.”

“சரி, ஆனா நீ ஏன் பெங்களூர் போகணும்? இங்கே இந்திரனுக்கு நீ அவசியம்டா...”

“நான் இப்ப இங்கே அநாவசியம் ஜான்ஸி. அந்தக் குடும்பம் எறும்புகளைப் போல ஒருத்தர் மத்தவரைப் பற்றி மிதந்து கரை ஏறிக்கும்...”

“உளறாதே... முதல்ல கோமளியின் கருவைக் கலைக்கணும். கருவின் வளர்ச்சி சந்திரனின் சாவுன்ற அதிர்ச்சியில் பாதிக்கப்பட்டிருக்கும்னு சொல்லி அதை செய்துடலாம். நாலைஞ்சு மாசத்தில் அதிர்ச்சியிலேருந்து ஓரளவு அவங்கெல்லாம் மீளட்டும். பிறகு, நீ இந்திரனை கல்யாணம் செய்துக்கிட்டு அந்தக் குடும்பத்திற்கு அன்பான வேலியாக இருக்கலாம், சுஜா...”

“அப்ப கோமளியின் நிலை என்ன ஜான்ஸி? தன்னை வேலிக்கு வெளியே நிறுத்திட்டாங்கனு நினைக்க மாட் டாளா? சந்திரனைப் பற்றிய பயமெல் லாம் கெட்ட கனவாக தேயற வரை அவங்க பொறுக்கட்டும்... பிறகு கோமளி கல்யாணம் செய்துக்கணும் - இந்திரனை! அப்பத்தான் அந்தக் குடும்பம் நலுங்காது... கலையாது... அதுக்கு முதல்ல நான் இங்கேருந்து விலகணும்!”

“கோமளிக்கு வேற மாப்பிள்ளை பார்ப்போம்...”

“அது சிரமம். அவ நிலைமை முழுக்க புரிஞ்சு அனுசரிக்க வேற யாருண்டு? இந்திரனின் மனைவியா ஆயிட்டா அந்தக் குடும்பத்தில நெருடலே இருக்காது. குழந்தைகளுக்கும் அதுதான் பாதுகாப்பு!”

“அப்ப, நீ.... உன் வாழ்வு?”

உடனே பதில் வரவில்லை... மேஜை விளக்கின் ஒளி ஒரு கோணத்தில் சுஜாதா மீது படிந்து, அவளை ஒரு தேவதை போலக் காட்டியது.

“நாம நல்லது நினைக்கறோம்... நடப்பதும் நல்லதாக அமையும்னு நம்புவோமே?”

கடிதத்தை கவனமாக மடித்து உறையுள் இட்ட சுஜாதா புன்னகைக்க... அது அவளது கண்களை எட்டவில்லை.